செந்தமிழ்

தொகுதி : 93 மே 1999 பகுதி : 5

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்,. பி.எச்.டி.,

தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

திரு. நா. குமரன் சேதுபதி,	தலைவர்
திரு. மா. தனுக்கோடிபாண்டியன்	செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன்	உறுப்பினர்
திரு. கே.எஸ்.டி. இராசேந்திரன்	உறுப்பினர்
திரு. டாக்டர். என். சேதுராமன்	உறுப்பினர்
திரு. கே. கந்தசாமி	உறுப்பினர்
திரு. வெ. பழனிச்சாமித்தேவர்	உறுப்பினர்
திரு. அ. சாமிஐயா	உறுப்பினர்
திரு. அ. தட்சிணாமூர்த்தி	உறுப்பினர்
திரு. வே. திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா. அழகுமலை	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக்	உறுப்பினர்

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர்	தமிழண்ணல்	மதுரை
பேரறிஞர்	செ. கந்தசாமி	முதல்வர்
பேரறிஞர்	ம.ரா.போ. குருசாமி	கோயம்புத்தூர்
பேரறிஞர்	ச. மெய்யப்பன்	சிதம்பரம்
பேரறிஞர்	சி.கதிர் மகாதேவன்	மதுரை
பேரறிஞர்	கு. துரைராசு	எட்டையபுரம்
பேரறிஞர்	அ.அ. மணவாளன்	சென்னை
பெரும்புலவர்	இரா. இளங்குமரன்	அல்லூர், திருச்சி
பேரறிஞர்	அ. தட்சிணாமூர்த்தி	தஞ்சாவூர்
பேரறிஞர்	எஸ்.எம். கமால்	இராமநாதபுரம்
பேரறிஞர்	ஈ.கே. இராமசாமி	மதுரை
பேராசிரியர்	சே. அரிராமநாதன்	மதுரை
பேரறிஞர்	அ.மா. பரிமணம்	தஞ்சாவூர்

செந்தமிழ்

திங்கள் இதழ்

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	
வாணாள் கட்டணம்	ரூ. 500	ரூ. 1000
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ 6	

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்,. பி.எச்.டி.,

பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் — 143
பேரறிஞர் நா. பாலுசாமி

2. அரசியலமைப்பில் காணப்படும் மக்களாட்சி இயல்புகள் — 146
பேரறிஞர் பா. சூரியநாராயணன்

3. பதிற்றுப்பத்தின் சொற்கொடை — 154
பேரறிஞர் அ.மா. பரிமணம்

4. இரு போகம் — 160
பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- *பேரறிஞர்* நா. பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சூத்திரம் 270

(ஆர் - இடைச்சொல்)

இயற்பெயர் முன்னர் ஆரைச் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே

இயற்பெயருக்கு முன் வரும் ஆர் என்னும் இடைச்சொல், உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணையிலும் பலரைக் குறிக்கும் பன்மை வினைமுற்றுக் கொண்டு முடியும். முடியும் என்பது முடிமே எனத் திரிந்தது. பலர் என்றது உயர் திணையில் பலர்பாலாலும் அஃறிணையிலும் பலர் பாலாலும் முடியும் "*ஆர்*" விகுதி பெற்ற முற்று வினைகள்.

(எ-டு) சாத்தனார் வந்தார், சேந்தனார் வந்தார் - உயர்திணையில் பலர்பால் முற்றால் முடிந்தது.

நரியார் வந்தார், கிளியார் பேசினார் - அஃறிணையில் "ஆர்" பெற்று முடிந்தது.

(சாத்தன், சேந்தன், நரி - இயற்பெயர்கள்)

சூத்திரம் 271

அசைநிலைக் கிளவி ஆகும் வழி அறிதல்

"ஆர்" என்னும் இடைச்சொல் அசையாக வரும் இடமும் உண்டு.

(எ-டு) *எல்லா உயிரொடும் செல்லுமார் (ஆர்) முதலே* - இதில் "ஆர்" அசைநிலையாக நின்றது. இது முன் சூத்திரத்திற்கு ஒரு புறநடை.

சூத்திரம் 272

(ஏ, குரை என்றும் இடைச் சொற்கள்)

ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண் டாகும் இயற்கைய என்ப

ஏ, குரை - இவ்விரண்டு இடைச்சொற்களும் இசை நிறை, அசை நிலை ஆகிய இரண்டுவகையிலும் ஒவ்வொன்றும் வரும்.

(எ-டு) ஏஎ. இஃதொத்த னென்பெறான் - இங்கு "ஏ" செய்யுள் இசை நிறைக்க வந்தது.

ஏஎ யென் சொல்லுக - இங்கு "ஏ" அளபெடுப்பினும் அசையாக மட்டும் நின்றது.

அளிதோ தானேயது பெறலருக் குரைத்தே -
இங்கு குரை இசைநிறை.

பல்குரைத் துன்பங்கள் சென்று படும் - இதில்
குரை என்பது அசை

சூத்திரம் 273

(மா-இடைச்சொல்)

மாஎன் கிளவி வியங்கோள் அசைச்சொல்

மா என்னும் இடைச்சொல் வியங்கோள் பொருளிலும் அசைநிலையாகவும் வரும்.

(எ-டு) புற்கை உணகமா கொற்கை யோனே - மா என்பது இங்கு "உண்பாயாக" என வியங்கோளாகவும் அசை நிலையாகவும் வந்தது. உண்கமா - மா அசை (வியங்கோள் - வேண்டுகோள்)

சூத்திரம் 274

(முன்னிலை அசைகள்)

மியாஇக மோமதி இடும்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்

மியா, இக, மோ, மதி, இடும் சின் - இந்த ஆறு இடைச் சொற்களும் முன்னிலையில் வினைகளுடன் சேர்ந்து வரும்.

(எ-டு) கேண்மியா (கேளுங்கள்)

கண்பனி ஆன்றிக (இக)	முன்னிலை
கண்டது மொழிமோ (மோ)	அசைகள்
உரைமதி வாழி (மதி)	ஆயினவாறு
புலம்ப கண்டிகும் (இகும்)	காண்க.
காப்பும் பூண்டிசின் (சின்)	

(தொடரும்)

***

(மார்ச்சு இதழ் தொடர்ச்சி)

பிரிவு 4 ஆங்கிலோ - சாக்சன் அரசர்களின் ஆட்சியிலும், நார்மானிய அரசர்களின் ஆட்சியிலும் தோன்றிய அரசியலமைப்பில் காணப்படும் முக்கியமான இயல்புகள்

பேரறிஞர் பா. சூரியநாராயணன்.

ஆங்கிலோ சாக்சன் அரசர்கள் : கி.பி 410-இல் இங்கிலாந்தில் உரோமானியருடைய ஆட்சி முடிவடைந்தது; ஜெர்மனியின் வடபகுதியிலிருந்து காட்டுமிராண்டி இனத்தவரான ஆங்கிலோ-சாக்சன்கள் இங்கிலாந்தில் குடியேறி பல்வேறு சுதந்திர அரசுகளை நிறுவி வாழ்ந்தனர்; இங்கிலாந்தின் தென், நடுப்பகுதிகளில் சாக்சன்கள் என்ற பிரிவினர் எஸ்செக்ஸ், சஸ்செக்ஸ், வெஸ்செக்ஸ் என்ற அரசுகளையும், ஆங்கில்கள் என்பார், ஈஸ்ட் ஆங்கிலியா, மெர்சியா, நார்த்தம்பிரியா என்ற அரசுகளையும். ஜூட்டுகள் என்பார் (Jutes) கென்ட் மாகாணத்தில் ஓர் அரசையும் நிறுவினர். இந்த அரசுகள் எப்போதும் ஏழு தனி அரசுகளாக இல்லை; அவ்வவற்றின் வலிமைக்கேற்ப அவை இணைந்தும், பிரிந்தும் இருந்தன. ஆங்கிலோ-சாக்சன் அரசுகளை ஆண்ட அரசர்களும், ஆட்சி ஆண்டுகளும் வருமாறு: எக்பர்ட் (கி.பி 802-839) ; ஆல்பிரட் (871-899); அதெல்ஸ்ட்டன் (925-940); எட்கார்(959-975); எதெல்ரெட்(978-1016); கன்யூட் என்ற டேனிஷ் அரசர் (1016-1035); எட்வர்ட்(1042-1066) ஹெரால்ட் (1066) இவர் பிரஞ்ச் நார்மண்டியின் நிலமானியப் பிரபு வில்லியம் என்பவரால் ஹேஸ்டிங்ஸ் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இந்த ஆங்கிலோசாக்சன் அரசர்கள் காலத்தில் மேலே குறிப்பிடப்பட்ட அரசுகளெல்லாம் ஒரே அரசரின் ஆட்சியில் இணைந்தது இல்லை. ஆகையால் இவைகளை எல்லாம் ஒரே அரசின் அரசாங்கத்தின்கீழ் இணைத்து ஒரு நாடாக அல்லது அரசாக உருவாக்கிய பெருமை இங்கிலாந்தின் முதல் நார்மன் அரசர் முதலாம் வில்லியம் என்பவரைச் சாரும்.

நாட்டை இணைப்பதில் கிறிஸ்தவத் திருச்சபையின் பங்கு:

ஆங்கிலோ சாக்சன் அரசர்களின் காலத்தில் தோன்றிய அரசியலமைப்பு எவ்வாறு மக்களாட்சி இயல்புடன் இருந்ததெனக் காணலாம். ஆங்கிலோ சாக்சன் அரசர்கள் காலத்தில் ஆங்கிலோ சாக்சன் கிறிஸ்தவத்திருச்சபை தோன்றிற்று; இந்தத் திருச்சபை பண்டைய ரோமானியப் பேரரசின் அரசாங்க அமைப்பைப் போன்று ஒரு நிறுவன அமைப்பில் இருந்தது; ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றிலும் தோன்றிய கிறிஸ்தவ திருச்சபையில் ஒரு உயர்தர மேலாளர் (Archbishops), அவருக்குக் கீழே மேலாளர்கள் (bishops), குருமார் (priests) முதலியோர் இருந்தனர். இவர்களெலலாம் ரோம் நகரத்திலிருந்த தலைமைக்குரு அல்லது போப் (Pope) என்பவருடைய கட்டுப்பாட்டு அதிகாரத்தில் இருந்தனர். இங்கிலாந்தில் செயின்ட் அகஸ்டின் என்ற கிறிஸ்தவத் துறவியும், அயர்லாந்தில் கெல்ட் இன மக்களை செயின்ட் பாட்ரிக் என்பாரும், ஸ்காட் மக்களை செயின்ட் கொலம்பா, செயின்ட எய்டன் என்போரும் கிறிஸ்தவ சமயத்தில் இணைத்தனர். கிறிஸ்துவை வழிபடும் முறையிலும், ஒழுக்க நெறியைப் பின்பற்றுதலிலும் ஒரே சீரான விதிகளை போப்பின் தலைமையில் எல்லாக்குருமாரும் நடைமுறைப்படுத்தினர். இவ்வாறு ரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் பரவிற்று. இந்தக் கிறிஸ்தவத் திருச்சபையே கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் லூதர் என்ற ஜெர்மன் துறவி போப்பின் தலைமையை ஏற்க மறுத்துப்புதிய புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவ நெறியை நிறுவும் வரை, எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் இருந்தது. (மார்ட்டின் லூதர், "பைபிள் அல்லது விவிலியநூல் ஒன்று மட்டுமே சரியான கிறிஸ்தவ நெறி தோன்றுவதற்கு ஆதாரமாகும். அதை மட்டும் நம்புபவனே உண்மையான கிறிஸ்தவன்" என்று போதித்தார்). இங்கிலாந்தில் தலைமை மேலாளர் ஒருவர் கான்ட்டர் பரிநகரத்தில் இருந்து, அவருக்குக் கீழே பல மேலாளர்களையும், குருமார்களையும் கட்டுப்படுத்தி, அவர்கள் வாயிலாக எல்லாக்

கிறிஸ்தவமக்களையும் கட்டுப்படுத்தினார். அரசர் அரசியலைப் பொறுத்தவரை நாடு முழுமைக்கும் தலைவராயினும், அவருக்கு நாட்டின் கிறிஸ்தவத் திருச்சபைமீது எவ்விதக் கட்டுப்பாட்டு அதிகாரமும் இல்லை; அத்தகைய அதிகாரம் போப்புக்குத்தான் இருந்தது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில்தான், போப்பின் தலைமையை விடுத்து, அரசர்களின் கட்டுப்பாட்டில் தேசியத் திருச்சபைகள்(National Churches) தோன்றின. முற்காலத்திலிருந்த ரோமானியப் பேரரசை இணைத்த வலுவான முடியாட்சியைப் போன்றதொரு அமைப்பை கிறிஸ்தவத்திருச்சபை பெற்றிருந்ததனாலும், எல்லாக் குடிமக்களும் கிறிஸ்தவராக இருந்ததனாலும், அவர்கள் யாவரும் ஒரே அரசின்கீழ் ஒரே நாடாக அமைவதற்கு வழி உண்டாயிற்று எனலாம். நாடு இணைப்பு என்பதுவும் மக்களாட்சி உணர்வுக்கு வழிவகுத்தது என்று நாம் கூறலாம்.

(உ) *ஆங்கிலோ-சாக்சன் மக்களின் கிராமவாழ்க்கையும், உள்ளாட்சி நிறுவனங்களும் :*

ஆங்கிலோ-சாக்சன் அரசர்கள் காலத்தில் மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை; அவர்கள் ஜெர்மனியிலிருந்து வந்து, இங்கிலாந்தில் குடியேறியபோது, இதன்பொருட்டு, நகரங்களில் தங்காமல் சிற்றூர்களில் வாழ்ந்தனர். காடுகளை அழித்து விளை நிலங்களைத் திறந்த வயல் முறையில் அமைத்தனர்; ஒவ்வொரு ஊரிலுமுள்ள பண்ணை அல்லது விளைநிலங்களை 3 பெரிய வயல் களாகப் பிரித்தனர்; ஒவ்வொருவருடைய வயலும் நீண்ட, குறுகிய துண்டுகளாகப் பிரிக்கப்பட்டது; ஊர்ச் சமுதாயத்தில் ஒவ்வொரு வருடைய தரத்துக்கும் ஏற்ப நிலத்துண்டுகள் கொடுக்கப்பட்டன; ஒவ்வோராண்டிலும், மூன்று பெரிய வயல்களுள், ஒன்றில் கோதுமையும், ஒன்றில் பார்லியும் பயிர் செய்யப்பட்டு, ஒன்று செழிப்பைத்திரும்பப் பெறும்பொருட்டு தரிசாகவும் விடப்பட்டன. விளைநிலங்களில் பெரும்பகுதி உள்ளூரிலிருந்த பிரபுவுக்கும், மற்றவை ஊரவருக்கும் உடைமைகளாகவும் இருந்தன. ஊரவர்

பிரபுவின் விளைநிலங்களையும், தங்களுடைய நிலத்துண்டுகளையும் பயிரிட்டனர். பிரபு பெரிய மரப்பலகை வீட்டில் குடியிருந்தார். பாதுகாப்புக்காகவும், பிழைப்புக்காகவும் அவரைச் சார்ந்திருந்த அடிமைகள் (thralls) அவருடைய பன்றிகளை மேய்த்தனர்; பெரிய வயல்களைத் தவிர, அவர்களுடைய ஆடுகள், மாடுகள், பன்றிகள் மேய்வதற்குப் பொது மேய்ச்சல் நிலங்கள் இருந்தன, நாட்டின் அரசர் போருக்குச் செல்லுகையில், அவரிடமிருந்து மானியமாகப் பெற்ற பிரபு அவருக்கு உதவி செய்யப் போயினர், தேவைப்படும் போது உதவிக்கு எல்லா சுதந்திரக் குடிமக்களையும் அழைத்தற்கு அரசருக்கு உரிமை இருந்தது. நிலமில்லாத சுதந்திரக் குடியாட்கள் பாதுகாப்புக்காகவும், நீதிபெறவும் தங்களை எவரேனும் ஒரு நிலப் பிரபுவிடம் தங்களை ஒப்புக்கொடுத்தல் (commendation) வேண்டும். இதுவே ஆங்கிலோ சாக்சன் அரசர்கள் காலத்தில் தோன்றிய நிலமானிய முறை (Feudalism) ஆகும். இந்த முறையில் நாடு வலு வாக இணைக்கப்படாமலிருந்தது; நார்மானிய அரசர்கள் நிறுவிய நிலமானிய முறை அரசருடைய வலுவான ஆட்சியின்கீழ் நாட்டை இணைத்தது.

உள்ளாட்சி நிறுவனங்கள் :

ஆங்கிலோ சாக்சன் அரசர்கள் காலத்தில், "மண்டபக் கூட்டங்களாக" (Hallmoots) ஊர்மக்கள் பிரபுவின் தலைமையில் கூடி, வழக்குகளைத் தீர்த்து, நீதி வழங்கி, ஊர்நிலங்களைப் பயிரிடுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்த சிற்றூர்கள் (Villages) தங்களுடைய பிரதி நிதிகளைத் தங்களுடைய பொதுவான செயல்களைத் தீர்மானித்தற் பொருட்டு ஒரு நூற்றுவர் மன்றத்துக்கு (Hundred moot)அனுப்பினர். நூறு (Hundred)என்பது, ஏறக்குறைய 100 குடும்பங்களடங்கிய ஒரு தொகுதி; இது உள்ளாட்சி நிறுவன அமைப்பில் அடித்தளத்திலுள்ள கூறு. பல நூறுகள் சேர்ந்த பெரிய அளவிலமைந்த பகுதி கவுண்ட்டி (County) எனப்படும். இது ஆட்சிப்பணிகளுக்காகவும், நீதி வழங்குதற்

காகவும் பிரிக்கப்பட்ட பெரிய கூறு ஷயர் (Shire) எனப்படும். சில சமயங்களில் அரசருடைய சார்பாக, "ஷெரீஃப்" (Sheriff) என்ற அதிகாரி ஷயர் மன்றத்தின் (Shire moot) கூட்டங்களை நடத்தினார். இக்கூறுகளைத்தவிர பட்டணங்களாக அமைந்த குழுக்கள் இருந்தன. இவை பரோ (Borough) எனப்பட்டன; இவை அரசரால் வழங்கப்பட்ட பட்டயங்களினடிப்படையில் (Charters) நிலமானியப் பிரபுவினாட்சி யில்லாமல் நகராட்சிச் சமுதாயங்களாக இருந்தன.

இந்த உள்ளாட்சி மன்றங்களில் நீதிவழங்கப்பட்ட முறை இக்கால முறையினின்றும் முற்றிலும் வேறுபட்டது. (இக்காலத்தில் குடிமக்களின் உரிமைகளும், பலவேறு குற்றங்களும் சட்ட நூல்களில் வரையறுக் கப்பட்டு, எழுதிவைக்கப்பட்டு, அவற்றை அறிந்த வழக்கறிஞர்களின் உதவியுடன், நீதிபதிகள் தீர்ப்பு வழங்குகின்றனர்) ஆங்கிலோ சாக்சன் காலத்தில் ஒருவன் இன்னொருவனைக் கொன்று விட்டாலோ, உறுப்பைச் சிதைத்தாலோ, அவன் மற்றவனுடைய சமூக தரத்திற்கு ஏற்பத் தண்டப்பணம் செலுத்துதல் வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுத்தால், அவன் குற்றமற்றவனென்று உறுதிகூறக் கூடிய அயலவரை அவன் அழைத்து வரலாம்; இவ்வாறு அழைத்து வரப்படுவர் "உதவிச் சான்றாளர்" (Oath helpers or Compurgatours) எனப்படுவர். இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவரால் செய்ய இயலா விடில் அவர் கருத்தேர்வுமுறைக்கு உட்படுதல் வேண்டும். (Trial by ordeal). அதாவது, கொதிக்கும் வெந்நீர் அண்டாவில் கைவிட்டு அங்கு கிடக்கும் ஒரு கூழாங்கல்லை எடுத்து. அல்லது பழுக்கக் காய்ச்சிய ஒரு கம்பியைக் கையில் பிடித்து மூன்றடி நடத்தல் வேண்டும்; இதில் ஏற்படும் வடு மூன்று நாட்களில் ஆறிவிட்டால் அவர் குற்றமற்ற வரென்று விடுவிக்கப்பட்டார்.

(b) *ஆங்கிலோ சாக்சன் காலத்தில் தோன்றிய விடான் சபை Witan or Witanogemot)*

ஆங்கிலோ சாக்சன் அரசர்கள் காலத்தில் தோன்றிய ஒரு முக்கிய அமைப்பு விடான்சபை ஆகும். இப்போது இங்கிலாந்தில் வளர்ந்துள்ள பாராளுமன்ற மக்களாட்சி முறை (Parliamentary

democracy) அல்லது மக்களுடைய பாராளுமன்றத்தால் கட்டுப்படுத்தப்பட்டு அதற்குப் பொறுப்பாக உள்ள ஆட்சிமுறை) தோன்றுவதற்குப்பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் பாராளுமன் றத்தைத் தோற்றுவித்த கரு இந்த விடான் சபை என்று ஆசிரியர்கள் கூறுவர். இதில் முக்கிய நிலப் பிரபுக்களும், முக்கிய குருமார்களும் உறுப்பினராக இருந்தனர். அரச பதவிக்கு உரியவர் யாவரென்ற ஐயம் தோன்றியபோது, இச்சபை தகுதி உடையவரை அரசராகத் தேர்ந்தெடுத்தது. (ஆங்கிலோ சாக்சன் அரச பதவி என்பது பண்டைய சமுதாயங்களில் காணப்பட்டது போல திறமை வாய்ந்த போர்த் தலைவர் பதிவியிலிருந்து தோன்றிய ஒன்று) கன்யூட், ஞானியாகிய எட்வர்டு போர்த்தலைவர் பதவியிலிருந்து தோன்றி ஒன்று) கன்யூட், ஞானியாகிய எட்வர்டு, (Edward the confessor) ஹெரால்ட் ஆகியோர் விடான் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே ஆவர். இச்சபை அரசர்களுக்கு ஆலோ சனை வழங்கிற்று. அதனுடைய ஒப்புதல் பெறாத எந்தக் கொள்கை யையும் (Policy) அரசரால் செயல்படுத்த இயலாது. விடான் சபையின் இந்த அதிகாரங்களெல்லாம் ஆங்கிலோ சாக்சன் காலத்து அரசர்கள் சர்வாதிகாரிகளாக வளர்ந்து விடாமல், ஓரளவு வரம்பு ஏற்படுத்தின என்றும், இந்த வரம்பு, மக்களாட்சி வளருதற்கு உதவிசெய்ததென்றும் கூறலாம்.

ஆங்கில அரசியலமைப்பு மக்களாட்சியாக வளருவதற்கு உதவி செய்த ஜெர்மனிய நிறுவனங்களும் கருத்துக்களும் :

ஆங்கில மக்களின் மூதாதையர் ஜெர்மானியராவர்; ஆகையால் ஜெர்மன் மக்களுடைய சுதந்திர விருப்பும், வீர உணர்வும் ஆங்கில அரசியலைப்பிலும் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தின. ஜெர்மானியர் சுதந்திர விருப்புடையவராதலின் அவர்கள் புனித ரோமானியப் பேரரசின் (Holy Roman Empire) ஓர் பாகமாக அமைந்திருக்காமல், சுதந்திரமாகவே இருந்து வந்தனர். அவர்களுடைய அரசியலமைப் பைப் பற்றி டாசிட்டஸ் (Tacitus) என்ற ஜெர்மன் ஆசிரியர் கி.பி. 98- இல் எழுதிய ஜெர்மானியா (Germania) என்ற நூலிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் செய்திகளைக் கீழே சுருக்கிக் கூறலாம் :

ஜெர்மன் அரசியலமைப்பின் ஒரு கூறு (Unit) வைக்கஸ் (Vicus) எனப்படும் கிராமம், அல்லது சிற்றூர் ஆகும். அது தன்னைத் தானே ஆண்டுகொள்ளும் ஒரு சுதந்திர சமூகம்; பிரின்சப்ஸ் (Princeps) அதன் தலைவர் சிற்றூரின் சுதந்திரக் குடும்பங்களின் தொகுதியினால், (அல்லது வருணத்தாரால்) (Tribe) தேர்ந்தெடுக்கப்பட்டார். பல வைக்க சுக்கள் சேர்ந்து ஒரு பேகஸ் (Pagus) எனவும், பல பேகஸ்கள் சேர்ந்து ஒரு சிவிட்டஸ் எனவும் அழைக்கப்பட்டன. இந்த ஆட்சிக்கூறுகளுள் வைக்கசில்தான் மக்களாட்சிக் கருத்துக்கள் காணப்பட்டன. அதில் அரசியலுரிமை உடைய போர்வீரரும் (armed warriors) அரசியல் உரிமைகள் இல்லாத பல்வேறு வகை அடிமைகளும் இருந்தனர். இவர்கள் யாவரினும் உயர்ந்தவர்களே பிரபுக்கள் (nobles) ஆவர். பிரபுக்கள் பரம்பரை பிரபுக்கள் எனவும் (hereditary nobles) பதவிப் பிரபுக்கள் எனவும் (nobles of office) இருவகைப்படுவர். பரம்பரைப் பிரபுக்கள் பெரும் நிலவுடைமையாளர், ஆனால் அரசியலுரிமைகள் இல்லாதவர்; இவர்களுடைய வகுப்பிலிருந்தே அரசர் தேர்ந்தெடுக்கப் பட்டார்; அவர் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்ததன் காரணமாகவே அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அவருக்கு அரசியலுரிமைகள் இல்லை. போரில் வீரர்களைத் தலைமை தாங்கி நடத்தும் பணியும் (lead) அவருக்குக் கொடுக்கப்படாமல் வருணமன்றத்தினால் (Tribal assembly) அதன் உறுப்பினரிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட "டியூசே" (Duce) என்ற தலைமை அதிகாரியிடம் கொடுக்கப்பட்டது. மற்ற அதிகாரங்களெல்லாம் வருணமன்றத்திடமும், சமயக் குருமார் களிடத்தும் இருந்தன. பிரின்சப்ஸ் எனப்படும் கிராம அல்லது ஊரதிகாரி பணியில் தோன்றிய பிரவு ஆகையால் இவ்வதிகாரி முன்பு இருந்த பிறப்பில் தோன்றிய பிரபுக்கள் வகுப்பை நீக்கி, உள்ளூராட் சியை நடத்தினார். இவர் வருணமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட வராகையால், இவ்வதிகாரி மக்களாட்சிமுறை வளருவதற்கு ஏற்ற ஓர் அதிகாரி ஆவர் எனலாம்; பணிப்பிரபுக்கள் இவ்வாறு

உள்ளூர் மட்டத்தில் தன்னாட்சி ***(Self Government)*** வளருவதற்குப் பங்கெடுத்து, நாடு அளவிலும், தன்னாட்சி அல்லது மக்களாட்சி வளருவதற்கு வழிகாட்டி உதவி செய்தனர் எனலாம்.

பணிப்பிரபுக்கள் வகுப்பில் ஒவ்வொருவரும் பல இளையபோர் வீரர்கள் அடங்கிய கோமிட்டஸ் (Comitus) எனப்படும் ஒரு குழுவைத் திரட்டிவைத்திருந்தார். இவ்வீரர்கள் வகுப்பிலிருந்தே பிற்காலத்தில் நிலமானியப் பணிசெய்த (Fedual services) வகுப்புதோன்றிற்று. வருணத்தவர் மன்றம் அல்லது குடிமக்கள் மன்றம் (trivices) என்ற நிறுவனத்தில் ஒரே வகுப்பைச் சேர்ந்த போர்வீரரும் இருந்தனர்; இவர்கள் அடிக்கடி கூடி நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளைத் தீர்மானித்தனர். பிரின்செப்ஸ் எனப்படும் அதிகாரிகளடங்கிய மன்றம் மக்கள் மன்றத்தின் தீர்மானத்துக்குரிய பொருட்களைத் திரட்டி அதற்கு அளித்தது. இத்தகையோரடங்கிய மன்றமே நாட்டின் சட்டமன்றத்தின் இரண்டாவது மன்றமாக ஆயிற்று. மக்கள் மன்றமே போர், அமைதிபற்றிய முடிவுகளை ஆய்வு செய்தது. இதில் தீர்மானங் களை மறுத்தற்கு அடையாளமாக கூக்குரல் முறையும் (Shouting) ஆதரித்ததற்கு அடையாளமாக ஈட்டியையும், கவசத்தையும் (அல்லது கேடயத்தையும்) தட்டி ஒலிக்கும் முறையும் பின்பற்றப்பட்டன.

டாசிட்டஸ் கூறும் இச்செய்திகள், இங்கிலாந்தில் தோன்றி டியூட்டானிய அல்லது ஆங்கிலோ சாக்சன் அரசில் ஆட்சி நிறுவனங்கள் எவ்வாறு மக்களாட்சி இயல்புடனிருந்தன என்று காட்டுகின்றன.

★ ★ ★

பதிற்றுப்பத்தின் சொற்கோவை

- பேரறிஞர் அ.மா. பரிமணம்

5 - நறவு

நறவு என்னும் தமிழ்ச்சொல் தேன், கள், மது, மணம் (வாசனை), நறவும் பூ முதலிய பொருள்களோடு, சேர நாட்டிலுள்ள ஓரூர் என்னும் பொருளிலும் சங்க நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. அச்சொல் 'அம்' என்னும் பின்னொட்டுடன் கூடி, "நந்தி நறவம் நறும்புகை" (குறிஞ்சி 91 , என்றமைந்து ஒருவகை மணமுள்ள கொடியினையும் ஞாழல் என்னும் மரவகையினையும் குறிக்கின்றது. மேலுமச்சொல், நறையெனநின்று நறவு என்பதன் பொருள்களோடு, ஒரு கொடி வகையினையும் குறிக்கின்றது. அக்கொடி மணமுடையது என்பதையும், மலர்தொடுத் தற்குரிய நார் கொண்டது என்பதையும், முறையே, "நறை நார்த் தொடுத்த வேங்கையம் கண்ணி" (புறம் 168-15), "தணி கமழ் நறைக் கொடி கொண்டு" (ஐங் 276) என்னும் சங்கப் பாவடிகளால் உணரலாம்.

நிலவு, கனவு, புறவு, நறவு என்றிங்ஙனம் அமையும் சொற்கள் பற்றித் தொல்காப்பியரும், நன்னூலாரும் தனியே விதி அமைத் திருப்பது நோக்கத்தக்கது. அந்த நூற்பாக்கள் வருமாறு :

"குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே"

- தொல். எழுத்து. 234.

"குறியதன் கீழ்ஆக் குறுகலும் அதனோடு
உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின்"

- நன். நூற்பா 172.

தொல்காப்பியரோடு மாறுபடாமல் நன்னூலார் இலக்கணம் கூறியுள்ள பலவற்றுள் இந்த இடம் ஒன்றாகும். இவற்றால் கூறப்படும் விதி செய்யுளுக்குரியது என்பதனைச் செய்யுளுள் உரித்தே; 'உகரம் ஏற்றலும்.... தூக்கின்' என்றும் தொடர்களால் இருவரும் குறிப்பிட் டுள்ளனர். இங்குக் கூறப்படும் விதி ஈரெழுத்தொரு மொழியால், குற்றெழுத்தினை அடுத்து நிற்கும் 'ஆ' கார இறுதிகொண்ட சொற்கள் சிலவற்றுக்கேயாகும் என்பதனைத் தொல்காப்பியர், குறியதன் இறுதி என்று பொதுப்படக் கூறியிருந்தாலும், அதிகாரத்தால் (ஆகாரஈறு) ஆகாரஇறுதிச் சொல் என்பதனைப் பெறவைத்துள்ளனர். 'நன்னூ லார்' 'குறியதன் கீழா' என்று வெளிப்படையாகவே கூறியுள்ளார். குறியதன் கீழ் 'ஆ' சிலசொற்களில் தனக்குரிய இரு மாத்திரைகளில் ஒன்று குறைவதற்கு இதுவே விதி என்பதனைக் குறுகலும் என்று நன்னூலும் ஆணையாகக் கூறியுள்ளது. இவ்விரு பேரிலக் கணங்களின் கருத்துப்படி, நிலவு, கனவு, புறவு, நறவு முதலிய சொற்களின் மூலவடிவம் முறையே நிலா, கரை, புறா, நறு என்றமையும் என்பதும், மேலும் அவை முறையே நிலவு கனவு புறவு நறவு என்றும் அமையும் என்பதும், அவ்வாறிடம் பெறுவது பொதுவாகச் செய்யுளகத்தே என்பதும் தெளிவாகின்றன. இவ்வகையிலமைந்த 'நறவு' என்னும் சொல் கள், மணம், கொடி முதலான பொருட்களில் பலவிடங்களிலும், ஊர் என்னும் பொருளில் ஒரே இடத்திலும் சங்க நூல்களில் இடம் பெற்றுத் திகழ்கின்றது. உரையாசிரியர்கள்தம் உரைகளால் மயக்கமேற்பட்டாலும் பிறிதோரிடம் ஊர்ப்பெயரில் காணப்படுவது சிந்திக்கத்தக்கது. 'நார் அரி நறவு' (பதி 11-15), 'தான் தரவுண்ட நனை நறவு மகிழ்ந்து' (பதி 40 : 19), 'நனையுறு நறவு' (பதி 51-18), 'நார் அரி நறவு' (பதி 88-19) ஆகிய இடங்களில் நறவு என்னும் சொல் கள், மது என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. 'வருங் கடலூதையிற் பனிக்கும் துவ்வா நறவு' என்னுமிடத்தல் (பதி 60-12) வெளிப்படை என்னும் இலக்கண வகையால், நறவு எனப் பெயரிய ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், "கோடு பல விரிந்த நாடுகாண் நெடுவரைச் சூடா நறவின் நாண் மகிழ் இருக்கை" (பதி 85-7, 8) என்னுமிடத்தில் இடம் பெற்றுள்ள "சூடா நறவு" என்பதனைப் பழைய உரையாசிரியரும் உ.வே.சா., அவர்களும் சூடப்படாத நறவு என்பது நறவம் பூவினைக் குறிக்காமல் கள் அல்லது மது என்பதனைக் குறிக்கும் என்று கொண்டு பொருள் விளக்கம் செய்துள்ளனர். ஆனால் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள், அதனை ஊர்ப்பெயராகக் கொண்டு "நறவு என்னும் ஊரின் கண் இருக்கும் அம் முன்றினை முதல்வர் நாட்காலைத் திருவோலக்கத்தையும்" என்று உரை வரைந்துள்ளார்.

"துவ்வா நறவு" (பதி. 60.12) என்னும் தொடரைக் காக்கை பாடினியார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடியபோதும், "சூடா நறவு" (பதி 85:8) என்னும் தொடரைப் பெருங்குன்றூர் கிழார் இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடியபோதும் பயன்படுத்தியுள் ளனர். இம்மன்னர்களுள் ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், உதியஞ்சேரல் மரபினையும், இளஞ்சேரல் இரும்பொறை அந்துவஞ்சேரல் இரும் பொறை மரபினையும் சேர்ந்தவராவர். பெருங்குன்றூர் கிழார், தம் வேந்தனது வெற்றிச் சிறப்பினைப் பாடுகையில், அவனை எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற பகை வேந்தர்கள் போகட்ட வேல்கள், செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடிப் பெற்ற ஊர்களினும் பலவாகும் என்று சிறப்பிக்கின்றார். சேரர் குடியின் இருமரபினையும் சேர்ந்த அரசர்கள் நெருங்கிய உறவினர்களாகவும், தம்முள் பகைமையில்லாதவர்களாகவும் இருந்துள்ளனர்.

"துவ்வா நறவின் சாயினத்தான்" (பதி. 60:12) எனப்பட்ட ஆடு கோட்பாட்டுச் சேரலாதனுக்குச் செல்வக் கடுங்கோ வாழியாதன், பகை மையில்லாத நெருங்கிய உறவினனாதலால் சிற்றப்பன்-சிற்றன்னை யின் கணவன்) அவனும் செல்வக் கடுங்கோ நறவு என்னுமூரில் இருந்திருத்தல் கூடும் என்னும் கருத்தில், அவன் மீது பெருங்குன்றூர் கிழார் பாடிய பாடலில் இடம் பெறும், "சூடா நறவின் நாண் மகிழ் இருக்கை (பதி 85-8) என்னும் தொடரைப் பெருங்குன்றூர் கிழார்

இளஞ்சேரல்களுள் ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், உதியஞ்சேரல் மரபினையும், இளஞ்சேரல் இரும்பொறை அந்துவஞ்சேரல் இரும்பொறை மரபினையும் சேர்ந்தவராவர். பெருங்குன்றூர் கிழார், தம்வேந்தனது வெற்றிச் சிறப்பினைப் பாடுகையில், அவனை எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற பகைவேந்தர்கள் போகட்ட வேல்கள், செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடிப் பெற்ற ஊர்களிலும் பலவாகும் என்று சிறப்பிக்கின்றார். சேரர் குடியின் இரு மரபினையும் சேர்ந்த அரசர்கள் நெருங்கிய உறவினர்களாகவும், தம்முள் பகைமையில்லாதவர் களாகவும் இருந்துள்ளனர்.

"துவ்வா நறவின் சாயினத்தான்" (பதி. 60:12) எனப்பட்ட ஆடுகோட்டுச் சேரலாதனுக்குச் செல்வக் கடுங்கோ வாழியாதன், நெருங்கிய உறவினராதலால் (சிற்றப்பன் - சிற்றன்னையின் கணவன்) அவனும் (செல்வக்கடுங்கோ) நறவு என்னுமூரில் இருந்தி ருத்தல் கூடும் என்னும் கருத்தில், அவன் மீது பெருங்குன்றூர்கிழார் பாடிய பாடலில் இடம்பெறும், 'சூடா நறவின் நாண்மகிழ் இருக்கை' (பதி 85-8) என்னும் தொடருக்கு ஔவை துரைசாமிப்பிள்ளையவர்கள் 'நறவு என்னும் ஊரிலிருக்கும் அம்முன்றினை முதல்வர் நாட்காலைத் திருவோலக்கத்தையும்' என்று உரை கூறியுள்ளார். துவ்வா நறவு, துய்க்கப்படாத (அருந்தப்படாத) நறவு என்றும் சூடா நறவு, அலையப் படாத நறவு என்றும் பொருள்பட்டு, நறவு என்னும் ஊரினைக் குறிப்பது இயல்பாகலாம். அங்ஙனமாயின் நறவு என்னும் ஊர் சேரர் குடியின் இருமரபினரும் இருந்துள்ள ஊராகக் கருத வாய்ப்புண்டு. இக்கருத்தினை உடன்படாது, சூடாநறவு (பதி 85-8) என்பது பழைய உரையாசிரியரின் கருத்துப்படி உண்ணும் மதுவினையே குறிக்கும் என்பதே ஏற்புடையதாகும் என்றால், 'நறவென்னும்' சொல் பதிற்றுப்பத்தில், ஊர் என்னும் பொருளில் ஒரே இடத்தில் மட்டும் (பதி 60-12) பயன்படுத்தப்பட்ட சொல்லாகும்.

சங்க நூல்களில் 'நறவு' என்னும் சொல் வடிவம் ஐம்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் ஆளப்பெற்றிருந்தாலும் ஊர்ப் பெயராகக்

கூறப்பட்டுள்ளது பதிற்றுப் பத்தில் மட்டுமேயாகும். அவ்வகையில் இச்சொல்லை இப்பொருளில் ஆட்சி செய்து அதற்கு இலக்கிய வாழ்வளித்த பெருமை பதிற்றுப்பத்தினையே சாரும்.

"ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தொண்டிப் பிரதேசத்தை நறவு என்ற நகரிலிருந்து ஆட்சி புரிந்தான்" என்று மு. இராகவையங்கர் தம் சேரன் செங்குட்டுவன் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மயிலை சீனி வேங்கடசாமி, பழங்காலத்தமிழர் வாணிகம் என்னும் தமது நூலுள், தமிழகத்தின் மேற்குக் கரைத் துறைமுகங்கள் பற்றி எழுதுங்கால் "மங்களூருக்குத் தெற்கே இருந்த துறைமுகப்பட்டினம் நறவு. இதுவும் துளு நாட்டைச் சேர்ந்திருந்தது என்று குறிப்பிட்டுள் ளார். மேலும் இவ்வூர் பற்றி அவர் குறிப்பிடுவது அறியத்தக்கது அது வருமாறு :

"துளு நாட்டிலே மங்களூர்த் துறைமுகத்திற்குத் தெற்கே நறவு என்னும் துறைமுகப் பட்டினம் இருந்தது. இதுவும் துளுநாட்டைச் சேர்ந்தது. துளு நாட்டு நன்னன் ஆட்சியில் இருந்தது. (நறவு என்னும் சொல்லுக்கு கள், மது என்னும் பொருளும் உண்டு. ஆகையால் நறவு என்னும் பெயருள்ள இந்தப் பட்டினத்தைத் தமிழ்ப்புலவர் "துவ்வா நறவு" (உண்ணப்படாத நறவு) என்று கூறினார். சேரன் செங்குட்டுவனுடைய மாற்றான் தாயின் மகன் இந்த நறவுத் துறைமுகப் பட்டினத்திலே இருந்தான் என்று பதிற்றுப் பத்து (6ஆம் பத்து 10 ஆம் செய்யுள்) கூறுகின்றது."

பதிற்றுப் பத்து, நறவு என்னும் ஊர்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது; வண்டுகள் மொய்ப்பினும் சுவைகுன்றாத, முட்டை போலும் தோற்றமுடைய பழங்கள், வழிச்செல்வோரின் களைப் பிணைப் போக்கும் வளமுடையது, மாறாத விளைவினையுடைய வயல்கள் சூழ்ந்தது. புதுப்புது வருவாய் மிக்கது. நீர்த்துளிகளைத் தூவும் அலைகளோடு படிந்து வரும்மேகம் கலைந்து வரும் கடலின் ஊதைக் காற்றால் வருந்துதல் அல்லது பிறவகையால் வருத்தமுறாத வீரர்களைக் கொண்டது. இதனால் நறவு எனும் ஊர், மேலைக்

கடற்கரையில், கடலுக்கும் மலைத் தொடருக்கும் இடையே, குறிஞ்சி, மருதம், நெய்தல் வளங்கள் மிகுந்து விளங்கிய ஒரு துறைமுகப்பட்டினம் என்பது நன்கு புலனாகிறது.

மேலை நாட்டுமுறையில் பயின்ற வரலாற்றாசிரியர்கள் பொதுவாகச் சங்கநூல்கள் கூறும் வரலாற்றுச் செய்திகளை இரண்டாந்தரமாகவும், கல்வெட்டு, தொல்லியல், அகழாய்வு, பழங்காசியல், பிறநாட்டார் ஆவணம் ஆகியவற்றின் ஆய்வு முடிவுகளை முதல் தரமாவும் கருதி வந்த நிலைமை பூம்புகார் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளால் மாறிவிட்டது. பிளைனி, தாலமி போன்ற யவன ஆசிரியர்களின் பயணக் குறிப்புக்கள், பெரிபுளுசு எனும் நூற்குறிப்புகள் சங்க நூற்செய்திகள் பலவற்றை உறுதிப்படுத்தி விளங்குகின்றன. அவ்வகையில் பதிற்றுப்பத்து குறிப்பிடும் "நறவு" பற்றி ஆசிரியர் களின் குறிப்புக்கள் கூறுவதனைக் கனகசபைப் பிள்ளை போன்றவர் கள் தம் நூல்களில் எடுத்துக் காட்டியுள்ளனர். தொண்டித்துறை முகத்தைத் திண்டிசு (Tyndis) என்று குறிப்பிட்டுள்ளது போல நறவு என்பதனை 'நவுரா' *(Naura)* என்று குறிப்பிட்டுள்ளனர். பழந்தமிழகத் தின் மேலைக் கடற்கரைத் துறைமுகங்களுள் ஒன்றாய், யவன நாடு களுடன் வணிகத் தொடர்பு கொண்டதாய் விளங்கிய நறவு என்றும் அரசிருக்கை ஊரின் இற்றை நாள் இடமும் பெயரும் அறிவது கடினமாகவுள்ளது. எனினும் அந்தப் பழைய ஊரினை அதன் பண்டை எழிலோடு உணர்த்தி நிற்கும் பெருமை பதிற்றுப் பத்தினுக்குரியதாகும்.

(தொடரும்)

ஃஃஃ

இரு போகம்

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி

நாவலர் நாட்டார் ஐயா அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட அறக் கட்டளைச் சொற்பொழிவு ஆற்றும் வாய்ப்புக் கிடைத்தமை என் வாழ்வின் பெரும்பேறுகளுள் ஒன்றெனக் கருதிப் போற்றுகிறேன். இந் நல்வாய்ப்பினை நல்கிய பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும் தமிழ்த்துறைத் தலைவருக்கும் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்; அறக்கட்டளை நிறுவிய பேரா. விமலானந்தம் அவர்களுக்கு என் வணக்கம்.

நாட்டாரையா

இவ்வறக்கட்டளை நாயகராகிய நாவலர் முதுபெரும்புலவர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களை முதற்கண் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வரலாற்று அரங்கிலே அப்பெருந்தகையின் இடம் எத்தகையது? தமிழ்ச் சான்றோர் திரு.வி.க.வின் கைவண்ணம் கணித்துத் தரும் கருத்துரை வருமாறு:

''இந்நாளில் பழம்பெரும் புலவர் வரிசையில் வைத்து எண்ணப்படுவோர் தொகை மிகச் சிறியதாயிருக்கிறது. அச்சிறிய தொகையினருள் ஒருவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார். நாட்டாரின் நுண்ணிய நோக்கில் அன்புப் புலனும் வீரக்கனலும் ஒருங்கே ஒழுகித் தழல்விடுதல் புலப்படும்.... ....நாட்டார் வீட்டிலும் பள்ளியிலும் புலமைப் பேச்சே பேசுதல் பின்னே தெரியவந்தது. அவர் கூட்டங் களில் பேசுவதைச் சுருக்கெழுத்தில் இறக்கிப் பெயர்த்துப் பார்த்தால் அது புலமை வாய்ந்ததாகவே காணப்படும்.... பழனியில் நாட்டார் திருமுருகாற்றுப்படை ஓதி ஆண்டவனை வழிபட்டது உள்ளத்தை உருக்கிறது'' [1]

* 1 – திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் I பக். 187 – 8

அவருடைய நடையின் தனித்தன்மையினைக் குறித்து, "பழஞ்சொற்களைக் கையாண்டு பழந்தமிழ் இலக்கிய நடையில் உரைநூல் பல இயற்றித் தந்த புலவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்" என்று வரைந்துள்ளார் டாக்டர் மு.வ. [2]

நாட்டார் ஐயா அவர்களின் புலமையாளுமை ஒருபால் ஓங்கியிருக்க, அப்பெருந்தகையின் தனியாளுமை எவர்க்கும் விம்மிதம் ஊட்டுவதாகும். செந்தமிழ் வித்தகர் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் வரைந்து பதிவுசெய்துள்ள ஒரு சொல்லோவியம் :

"அண்ணாமலையிலிருந்து சிதம்பரம் ஆருத்ரா தரிசனத்திற்காகக் காலம் சென்ற நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களை நானும் அவர் மகன் நடராசனும் வண்டியில் அழைத்துச் சென்றோம். நான்தான் வண்டியோட்டினேன். அந்த ஊர்த் தேரில் ஒரு மாறுதல்" இரும்புச் சங்கிலி வடக்கயிறு இல்லை.

"நாட்டார் அவர்கள் ஏகாக்கிர சித்ததத்துடன் நின்று தொழுது கொண்டிருந்தார்கள். கூட்ட நெரிசலில் திடீரென்று தலைகுப்புற விழுந்து விட்டார்கள். தேர்ச் சங்கிலிக் கண்ணி." நெற்றியில் பெரிய வீக்கம் உண்டாக்கிவிட்டது. உடனே தூக்கினோம். அவர்கள் மீண்டும் நின்று கைகூப்பித் தொழுதவண்ணம் இருந்தார்கள்.

"திரும்பி வரும்போது நெற்றியில் கை வைத்து, என்னடா சம்பந்தம், வீங்கி இருக்கிறது?" என்றார்.

"கீழே விழுந்தது கூட நினைவு இல்லை அவர்களுக்கு. இப்படி ஒரே சிந்தையாகத் தொழுத அவருடைய ஈடுபாட்டின் திறம் அவருடைய புலமை ஆற்றலின் அடிப்படையோ என்று வியந்தேன்" [3]

---

* 2 – தமிழ் இலக்கிய வரலாறு – மு. வரதராசன் – பக் 323.

* 3 – குமுதம் 6.2.69 இதழில் அ.ச.ஞ.வின் கட்டுரை

புலமையாற்றலின் அடிப்படையில் உரம் ஏறியிருந்த இந்த வழிபாட்டுத் திறத்தைப் புரிந்து கொண்டால்தான், "சமயக் காப்புக்கு எல்லாஞ் செய்யலாம் என்ற எண்ணமுடையவர் நாட்டார் என்று உணரலானேன்" என்று திரு.வி.க. குறித்தது விளங்கும்[4]. வெளிப்படையாகச் சொல்லமுடியாத பல காரணங்களுக்காகச் சமய வேடம் பூண்டு பூசலிட்டுக் குழப்பம் விளைத்திடும் சமயப் போலிகள் எங்கே, நாட்டார் அனைய சமயச் சான்றோர்கள் எங்கே!

"பழம்பெரும் புலவர் வரிசையில் எண்ணப்படுவோர் தொகை மிகச் சிறியது" என்பது மட்டுமன்றி, பொய்யடிமை இல்லாத புலவர்கள் தொகையும் மிக மிகச் சிறியது என்பதையும் நாம் உணரவேண்டியுள்ளது.

நாட்டார் ஐயா அவர்கள் இயற்றிய நூல்கள், உரை நூல்கள், பல; ஆயினும், கம்ப ராமாயணம்பற்றி அவர்கள் நூல் எதுவும் எழுதவில்லை[5]. ஆயினும், அவர்தம் நினைவில் நிகழும் இவ்வாண்டின் சொற்பொழிவுகள் கம்ப ராமாயணம் பற்றியனவாய் அமைகின்றன.

அதற்கு ஒரு விளக்கம் தர விழைகின்றேன்.

நாட்டார் ஐயா அவர்கள் 1909இல் கோவையில் தமிழ்ப்பணி ஆற்றினார்கள்; இப்போது தூய மைக்கேல் மேனிலைப் பள்ளியாகத் துலங்கும் கல்வி நிலையம் அப்போது தூய மைக்கேல் இடைநிலைக் கல்லூரியாக இருந்தது. அக் கல்லூரியில் தமிழ்ப்பணி ஆற்றினார் நாட்டார் ஐயா அவர்கள்.

இன்று கோவையில் மிகச்சிறப்பாகக் கம்பன் கழகத்தை நிறுவி நடத்தி வருகிறார், கம்பன் அறநெறிச் செம்மல் திரு. ஜி.கே. சுந்தரம். இன்றைய கம்பன் தமிழகத்திற்கு முன்னோடியாக 1909இல் ஒரு கம்பர்

---

* 4 - திரு.வி.க. வாழ்க்கைக்குறிப்புகள் I பக் 188

* 5 - கம்ப ராமயாணம் பற்றிக் கட்டுரைகள் உண்டு. எ.டு. கம்பர் காட்டும் ஒழுக்க நெறிகளிற் சில (சென்னைக் கம்பர் *கழகத்தின் கம்பன் மலர் 1945*)

கழகம் நிறுவப்பட்டு நடந்தது. திரு. ஜி.கே. சுந்தரத்தின் தந்தையார் ஜி. குப்புசாமி நாயுடு அந்தக் கழகம் உருவாகக் காரணராக இருந்தார். அவருக்கு அந்த நினைப்பு எழுந்ததற்குக் காரணமாக இருந்தவர் நாட்டார் ஐயா அவர்கள்.

கோவையில் அன்று இருந்த கம்பர் கழகத்திற்கும் நாட்டார் ஐயா அவர்களுக்கும் இருந்த தொடர்பினைத் திரு. இ. பாலகிருஷ்ணநாயுடு தெளிவுபடுத்தியுள்ளார்.

"நாவலர் - பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் புலவர் சிலரில் ஒருவர், ஏன்? ..... ஒப்பற்றவர் என்றே கூறிவிடலாம். பண்டைச் சான்றோர்களின் பண்புகள் யாவும் ஒருருக் கொண்டதென விளங்கிய திருவுருவினர். ...... அவருடைய மாணவருள் ஒருவராயிருந்த உப்பிலிபாளையம் ஆர்.வி. லட்சுமய்யா என்ற ராஜு நாயுடுவிடம் அவருக்கு ஒரு தனிப்பற்று உண்டாயிற்று.... நாட்டாரவர்கள் ராஜு நாயுடுவின் நெருங்கிய குடும்ப நண்பராய் விட்டார். வாரத்தில் இரண்டு நாள் உப்பிலிபாளையத்தில் ராஜு நாயுடுவின் இல்லத்தில் குடும்பத்தில் ஒருவராய்த் தங்கியிருந்தார். ..... அவர் வந்ததும் ஒரே குதூகலமாயிருக்கும். வீட்டின் மேல்மாடியில் எல்லோரும் மாலைப் பொழுதில் கூடுவர். அவர்களுக்குப் படைப்பதற்கென்றே பல ருசிகரமான இலக்கியச் சுவைகளைத் தயாரித்துக் கொண்டு வருவார்."

"குப்புசாமி நாயுடு[6] இயற்கையாகவே கலாரசிகர்..... வேங்கடசாமி நாட்டார் நடத்தும் இலக்கியப் பொழுது போக்கில் கலந்து கொள்ளத் தவறமாட்டார். அவருக்கும் நாட்டாருக்குமிடையே நட்பு வளர்ந்தது."

"வேங்கடசாமி நாட்டார் போன்ற அறிஞர்களுடைய இலக்கியச் சுவையை நம்மைப்போல் ஒரு சிலர் மாத்திரம் கேட்டு ஆனந்தித்தால் போதாது. ஊர்மக்கள் எல்லோருக்குமே அது பயன்படவேண்டும். அதற்காக 'கம்பர் கழகம்' என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி,

---

* 6 - லட்சுமி மில்லை நிறுவியவர் ஜி.கே. சுந்தரத்தின் தந்தையார்

வாராவாரம் ஊர்மக்களைக் கூட்டி, அறிஞரின் சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறச் செய்யவேண்டும் என்று குப்புசாமி நாயுடு சொன்னதை எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

"நினைத்த காரியத்தை அப்போதே செய்து முடிக்க வேண்டு மென்ற ஆர்வமும் ஆற்றலும் பெற்றிருந்த அவரும் அவரைப் போலவே பண்பு படைத்திருந்த ராஜூ நாயுடுவும் வேங்கடசாமி நாட்டாரின் ஆசியோடு 'கம்பர் கழகம்' ஆரம்பித்தனர்.... " கழகத்தின் ஆரம்ப விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.......... வேங்கடசாமி நாட்டார் தலைமைவகித்தார்[7].

- இவ்வாறு கொங்குநாட்டில் கம்ப ராமாயணப் பணி நடைபெற நாட்டார் ஐயா அவர்கள் கால்கோள் விழா நடத்தியிருக்கிறார்கள். கோவை நகரில் வாழும் வாய்ப்பும் கோவைக் கம்பன் கழகப் பணிப் பேறும் யான் பெற்றிருப்பதால், நாட்டார் ஐயா, அறக் கட்டளைச் சொற்பொழிவு கம்ப ராமாயணம் பற்றியதாயிருப்பது ஒருவாறு பொருந்துவதே எனத் துணிந்தேன்.

அறக் கட்டளை ஏற்படுத்திய பெருமக்களுக்கும் இவ்வாய்ப் பினை நல்கிய பல்கலைக் கழகப் பொறுப்பாளர்களுக்கும் நன்றி கூறி, என் பணியினை இயன்ற அளவில் நிறைவேற்ற முற்படுகிறேன்.

6. கவிஞரும், காவியமும்

"கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று தமிழ்நாட்டிற்குப் பெருமை தந்த புலவராகப் பாரதியாரால் பாராட்டப்பெற்றவர் கம்பர். தமிழிலக்கிய வானில் பேரொளி வீசும் கவிஞர் அவர்," எனக் கம்பரையும், "கம்ப ராமாயணம் ஒவ்வொரு பகுதியும் சொல்நயமும் பொருள் நயமும் கற்பனை வளமும் நிரம்பிச் சுவை மிகுந்த காப்பிய மாய்த் திகழ்கிறது" எனக் கம்பர் அருளிய இராமாவதாரத்தையும் போற்றி உரைக்கிறார் டாக்டர் மு.வ.[8].

* 7 - இம் மாமனிதரின் வாழ்க்கை வரலாறு, பக். 86 - 89
* 8 - தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசன், பக். 167, 179

குறிப்புப் பொருளே காப்பியத்தின் உயிர் என்பர் சான்றோர். சொல்லால் தெளிவும் பொருளால் ஆழமும் கற்பனையில் குறிப்பு நலனும் செறிந்திருப்பது பெருங்கவிதை இயல்பு எனல் மிகையாகாது.

பொருள் ஆழமும் குறிப்பு நலனும் பெருங்கவிதைக்கு அமரத்தன்மை அருள வல்லன. அத்தகைய கவிதைகளே நவில் தொறும் நயம் புலப்படுத்தும் பாங்குடையவை யாகும்.

இராமபிரான் கதையினைப் பல மொழிகளிலும் பாடியுள்ளனர்; தமிழிலும் இராமகாதை விளிம்பினோர் பலர். அவருள் மிக்கோங்கிய சிறப்பும் சீர்மையும் கம்பருக்கு உரிமைச் செல்வமாயின.

பரவிகம்

கதை, கவிதை, காப்பியம் என வரும் கலை வடிவங்களெல்லாம் உட்குறிப்பு உடையனவாக அமைதல் வேண்டும். 'எதுகை இடறாமல் மோனை முறியாமல்' ஆரவாரச் சொற்பெருக்குகளால் மயக்கத்தை ஊட்டலாம், நெடிது நிற்கும் மாண்பினை நாட்டமுடியாது. கதை மட்டுமே சொல்லிச் செல்லும் (narrative) எளிய அமைதி காப்பியம் படைப்போர்க்கும் போதாது.

நடையின் நின்றுயர் நாயகன் ஆகிய இராமபிரானின் கதை தோம் அறு மாக் கதையாகும்[9]. ஆம், தோம் அறு: குற்றம் அற்ற பெருமைக்கு உரிய கதை. அதனை வழங்கிய கவிச் சக்கரவர்த்திக்குக் கவிதை எப்படி இருக்க வேண்டும் என்பது தெரியும்.

"தொடை நிரம்பிய தோமறு மாக்கதை" என்ற அடியில் தொடை என்ற சொல் ஆழச் சிந்தித்தற்கு உரியது. யாப்பியல் உறுப்புகளில் ஒன்றாகிய தொடையினனை மட்டும் நினைவுகூர்வது போதாது. தொடுத்தல் என்ற பாங்கினால் காப்பியத்தின் செறிவு நிறைந்திருக்க வேண்டும். கைப்படு பொருளாயினும் கருத்துப் பொருளாயினும் அணுக்களின் பிணிப்புறு செறிவிலே தொய்வு ஏற்படுமாயின்

* 9 - கம்ப. 11

பொருளும் மலிவுற்று நலிவுறும்; பொருள் எனும் தகுதியினையும் இழந்துவிடும்.

ஓரிடத்துச் சொன்ன பொருள் வேறு எவ்விடத்துச் சொல்லுகின்ற பொருளொடு சிறுகுற இயைந்த தொடர்பு உடையதாக அமைதல் வேண்டும். முதலும் நடுவும் ஈறும் நுவல் பொருட் செறிவிலே சிறந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் காப்பியப் பண்பாகிய பாவிகம் உயிர்ப்புடையதாகத் துலங்கும்.

'பாவிகம் என்பது காப்பியப் பண்பே'[10] என்ற நூற்பாவுக்கும் "பாவிக மென்று சொல்லப்படுவது பொருட்டொடர்நிலைச் செய்யுட்டிறத்துக் கவியாற் கருதிச் செய்யப்படுவதொரு குணம். அஃது அத்தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது, தனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது" என வரையப்பட்ட உரைவிளக்கங்கள் நினைவிற் கொள்ளத்தக்கன.

பாவிகம் : ஒரு விளக்கம்

மேற்குறித்த பாங்கிலே, கம்பர் இயற்றிய இராமாவதாரக் காப்பியத்தின் பாவிகம் யாது?

'சிறையிருந்தாள் ஏற்றம் கூறிற்று இராமாயணம்'

–இவ்வாறு சான்றோர் கூறியுள்ளனர். 'வேறுள குழுவையெல் லாம் மானுடம் வென்றதம்மா'[11] என்ற தொடரை மனத்திருத்தி இராம காதை முழுவதற்கும் அதனை மையப்படுத்தி விளக்குதல் உண்டு. 'நடையின் நின்றுயர் நாயகன் தோற்றம்'[12] என்பதை மையப்படுத்தி இலட்சிய நாயகனாகிய பெருமான் அவதாரப் பீடு பேசுவது என விளக்கவும் இடமுண்டு.

இவற்றையோ இவைபோன்ற பிறவற்றையோ மறுத்தோ மாற்றியோ உரைக்கும் நோக்கம் எனக்கும் இல்லை.

* 10 – தண்டி. பொருளணி. 65
* 11 – கம்ப. 3804
* 12 – கம்ப. 11

'பாவிகம்' என்பது ஒரே கருத்தைத்தான் கொண்டிருக்க வேண்டும் என வரயறைப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. தொடர்புடைய கருத்துகளின் தொகுப்பாகவும் காப்பியத்தின் பாவிகம் அமையமுடியும் என்பது என் நம்பிக்கை. இக் கருத்தே முடிவானது என யான் வற்புறுத்தவில்லை; பாவிகம் பற்றி மேல்நிலை ஆய்வு மேற்கொள்வார் இதனைக் கருதிப்பார்க்க வேண்டும் - இது வேண்டுகோள்.

கம்பராமாயணத் தொடக்கத்தில் தயரதன் பெருமையினை எடுத்துரைக்குமிடத்து,

ஈந்தே கடந்தான் இரப்போர் கடல்;
எண்இல் நுண்நூல்
ஆய்ந்தே கடந்தான், அறிவு என்னும்
அளக்கர்; வாளால்
காய்ந்தே கடந்தான் பகை வேலை;
கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான், திருவின் தொடர்
போக பௌவம்[13]

என்ற பாடல் காணப்படுகிறது. இதன் இறுதிப் பகுதியினைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். இன்பம் எனும் கடலினைத் தயரதன் கடந்தான். எப்படி? மன நிறைவு ஏற்படும் வரையிலே (கருத்து முற்ற) அனுபவித்து அனுபவித்தே கடந்தானாம்.

எத்துணைப் பெரும் பதவியில் இருப்பினும், உலகியல் இன்பங்களை ஆரத் துய்ப்பதில் முழுநாட்டம் செலுத்துவோரைச் சான்றோர் உலகம் ஏற்குமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

தயரதன், சச்சந்தன் போல, இன்பத்துறையில் எளியனாய் வாழ்ந்தனன் என்று கொள்வது பொருந்துமா?....... "போக பௌவம் கருத்துமுற்றத் தோய்ந்தே கடந்தான்" என்று குறித்து நிறுத்தினார்.

* 13 - கம்ப. 172

இத்தகைய தடைகள் எழுவதைத் தவிர்க்கமுடியாது. தயரதனை வெறும் போகியாகக் கொள்ள முடியவில்லை.

மெய்யாய வேதத்துறை வேந்தருக்கு
ஏய்ந்த, யாரும்
செய்யாத யாகம் இவன் செய்து
மறந்த மாதோ[14]

வேத நெறிப்படி வேந்தர்களுக்கு என விதிக்கப்பட்ட வேள்விகள் யாவும் செய்தவன்; வேந்தர்கள் பிறர்செய்யத் தவறிய வேள்விகள் யாவும் செய்தவன்; பதவி ஏற்ற தொடக்க காலத்திலேயே இந்த வேள்விகளையெல்லாம் செய்தவன்; செய்துமுடித்து நெடுங்காலம் ஆகிவிட்டமையால் நினைவரங்கிலிருந்துகூட மறைந்துவிட்டது (மறந்தேபோய்விட்டது).

வெள்ளம் இன்ன திசையில்தான் பரவும் என்று சொல்லமுடியாது; பறவை இதோ இந்தப் பக்கமாகத்தான் பறக்கும் என்று குறித்துக் கூறிட முடியாது; வேசையர் மனமும் அப்படியே. இது பொது விதி. ஆனால், தயரதன் ஆட்சியிலே வெள்ளமும் பறவையும் வேசையர் உள்ளமும் ஒருமைப்போக்கு உடையனவாய் இருந்தனவாம். ஆட்சிச் செம்மையை ஆசிரியர் உணர்த்தும் முறை இது.

'வெள்ளம், பறவை, வேசையர் உள்ளம் இவையெல்லாம் தயரதனின் அறச் செங்கோலின் மாட்சியால் ஒருவழிப்பட்டன' என்று கூறுவது ஒருவகையில் இயற்கை இறந்த நிகழ்ச்சிதான்.

இதே உத்தியினைக் கையாண்டு, பாண்டியனின் செங்கோன்மைச் சிறப்பினைக் கோவலன் வாயிலாக இளங்கோவடிகள் புலப்படுத்தியுள்ளார்.

கோள்வல் உளியமும் கொடுப்புற்று அகழா
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா

---

* 14 – கம்ப. 170

அரவும் சூரும் இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு என
எங்கணும் போகிய இசையோ பெரிதே[15]

அறநெறி திறம்பாத ஆட்சி நடத்தினவன்; வேந்தர்க்கு விதிக்கப் பட்ட வேள்விகளையெல்லாம் நெடுங்கால முன்பே செய்துமுடித்த வன். இத்தகு மாண்புடையோனைப் போக பௌவம் துய்த்தே கடந்த வனாகச் குறிக்கின்றார், கம்பர்.

முரண்போலத் தோன்றும் இது நம் சிந்தனைக்கு உரியது.

தேவியர் அறுபதினாயிரத்து மூவரொடு வாழ்ந்த தயரதனின் 'போக நிலை' இவ்வாறு இருக்க, 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம் தந்த[16] ஆண்நாதன்[17] ஆகிய இராமனின் 'போக நிலை' யினையும் கம்பர் குறித்துக்கூறியிருக்கிறார். இராமாவதாரக் காப்பியத்தின் இறுதிப்பகுதியிலே இராமபோகம் குறிக்கப்படுகிறது .

விரதநூல் முனிவன் சொன்ன,
விதிநெறி வழாமை நோக்கி
வரதனும் இளைஞற்கு ஆங்கண்
மாமணி மகுடம் சூட்டிப்,
பரதனைத் தனது செங்கோல்
நடாவுறப் பணித்து, நாளும்
கரைதெரி விலாத போகக்
களிப்பினுள் இருந்தான் மன்னோ[18]

* 15 - சிலப்-புறஞ்சேரி 5.9.
* 16 - கம்ப. 5378
* 17 - இராமபிரானை இத்தொடரால் இந்திரன் குறிக்கிறான். கம்ப. 2611 பிறன்மனை நோக்காத பேராண்மை கொண்டானை ஆண்நாதன் (புருசோத்தமன்) என்றது சாலப் பொருத்தம்தானே.
* 18 - கம்ப 10331

பதினான்கு ஆண்டுகள் கானக வாழ்க்கை முடித்து, அயோத்தி மீண்டபின் ஆட்சியுரிமையினை ஏற்கிறான், இராமன். வசிட்டனைக் கலந்து ஆய்ந்து, பரதனுக்கு மகுடம் சூட்டுகிறான்; தன் சார்பில் ஆட்சியினை நடத்துமாறு பரதனைப் பணிக்கிறான். இவ்வளவும் செய்துமுடித்து இராமபிரான் மேற்கொண்டு என்ன செய்தான் என்பதைப் பாடலின் இறுதிப் பகுதி சுட்டுகிறது :

...நாளும்
கரைதெரி விலாத போகக்
களிப்பினுள் இருந்தான்

இராமபிரான் போகக் களிப்பினுள் நிலைத்தான் (இருந்தான்); நாளும் போகக்களிப்பினுள் இருந்தான்; கரை என ஒன்றில்லாமல் பரந்து விரிந்ததாகிய போகத்தில் இருந்தான். இஃது இராமபோகம்.

இங்கு மீண்டும் ஒருமுறை பாவிகத்துக்குத் தரப்பட்ட உரைவிளக் கத்தினை நினைவூட்டிக்கொள்ளுதல் நலம். "பாவிகம் என்று சொல் லப்படுவது பொருட்டொடர் நிலைச் செய்யுட்டிறத்துக் கவியாற் கருதிச் செய்யப்படுவதொரு குணம் அஃது அத்தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படும் அல்லது, தனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது".

இராமாவதாரமாகிய பொருள்தொடர்நிலைச் செய்யுளில் பாவிகம் என்ற 'குணம்' எவ்வாறு அமைந்துள்ளது என்பதை நோக்கிக் கொள்வதற்கு இங்கு எடுத்துக்காட்டிய இரு பாடல்களும் உதவுமோ என்று கருதிப்பார்க்க நினைக்கிறேன்.

காப்பியம் முழுமையினையும் இவ்விரு பாடற் கருத்தமைதி கொண்டு கணிக்கமுடியும் எனத் தோன்றுகிறது.

'கவியாற் கருதிச் செய்யப்படுவதொரு குணம்' எனப் பாவிகத் துக்குத் தரப்பட்ட விளக்கம் மிக நுட்பமானது. கல்வியிற் பெரியர் கம்பர்; கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே - இவ்வாறெல்லாம் கவிச்சக்கரவர்த்தி புகழப்படுகிறார். எழுத்தாணி கொண்டு ஏட்டில் துளைத்ததெல்லாம் இன்கவிதை'

என்பது கம்பருக்குப் பொருந்தாது. எண்ணித்துணிக கருமம் என்பது தெய்வ வாக்கு. எண்ணம் என்பது புற மனத்துச் செயல்மட்டுமன்று; புறமனத்தை இயக்கும் அகமனம், அகமனத்தைத் தூண்டும் அடிமனம் ஆகியவற்றின் செயலுமாகும்.

கலை புறவடிவு கொண்டபின்தான் நம் கருத்துக்கும் கணிப்புக்கும் இடமாகிறது. ஆயின், கலைஞனின் அடிமனத் தூண்டுதலால் - அகமனத்தவத்தால் - புறமனச் செயலால் கலை உருவாகிறது. "எப்படி இந்தக் கலையை உருவாக்கினாய்" என்று கலைஞனைக் கேட்டால், எந்தக் கலைஞனாலும் செவ்வனிறை தரமுடியாது. ஆயினும், கலைஞனின் மனம் மூன்று நிலைகளாலும் திட்டமிட்டு-கருதி-எண்ணித்துணிந்த துணிவே கலை.

இப்பல்கலைக் கழகத்துக்குப் பெயர் வழங்கிய புரட்சிக்கவிஞர், கவிதை பிறந்த நிலையினை விளக்கியிருப்பது யாவரும் அறிந்தது தான். எனினும், தொடர்ந்து கருதி, நினைவூட்டுகிறேன்!

உதாரன் என்ற கவிஞன் சோலையிலே காத்திருக்கிறான்; மறைவுக்கு இடப்பட்டுள்ள திரையின் அப்பால் கவிதைப் பாடம். கேட்க மாணவியாகிய இளவரசி வரவேண்டும். காத்திருக்கும் நிலையில் வான வெளிப்பரப்பிலே அழகு உலாச் செய்யும் திங்களஞ் செல்வனைக் காண்கிறான் கவிஞன். கண்டதுமட்டுமே அவன் புறமனம் உணர்ந்து செய்த செய்கை. கவிஞன் கொலுவிருக்கும் காட்சியிலே அமைத்தான்; கலைமகனின் கருவியாக உதாரன் கவிஞன் ஆனான்.

இமையாது நோக்கினான் முழுநிலாவை
இருவிழியால் தழுவினான் மனத்தால் உண்டான்
சுமைசுமையாய் உவப்பெடுக்க உணர்வுவெள்ளம்
தூண்டிவிட ஆ ஆ என்றான்; வாணி
அமைத்திட்டாள் நற்கவிதை மழைபோற்
பெய்தான்.........."

* 19 - பாரதிதாசன் கவிதைகள் தொகுதி I

நோக்குதல் கூட இமையாத நோக்காகும்போது கலைஞனின் புறமனம் அகமனத்துள் அமிழ்ந்திவிடுகிறது. 'மனத்தால் உண்டான்' என்ற நிலையில் அடிமனம் தொழிற்படத் துவங்குகிறது. அப்போது எழுகின்ற உணர்வு வெள்ளம் அடிமனத்திலிருந்து பொங்குவது.

உணர்விலே இருக்கும் தன்னை மறந்து 'லயத்திலே பிறக்கிறது நயக் கவிதை. அந்தக் கவிதை கலைஞனின் புறக் கட்டுப்பாட்டில் பிறப்பதில்லை' என்றாலும் அவன் 'மனம்' கருதிப் படைத்து வழங்குவதுதான். அதிலே திட்பமான திட்டம் இருக்கும்.

காவியத்தைத் தொடங்கும்போதே அலகிலா விளையாட்டு உடைய தலைவரிடம் *சரண்புகிறார்* கலைஞர்.

சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை

எற்கு உணர்த்த அரிது[20]

என்று தம்மை இழந்த நிலையிலே - கலந்த நிலையிலே அவர், நற்குணக் கடல் ஆடுதல் நன்றரோ என்று கரைந்துவிடுகிறார். ஆயினும், நடையில் நின்றுயர் நாயகன் நினைவு - நேசம் மறக்கவில்லை அவர் நெஞ்சம்; தோமறு மாக்கதை தீட்டும் முயற்சி முனைப்பும் மறக்கவில்லை.

குறிக்கோள் இருக்கிறது; ஆயினும் தன்னை மறந்த 'லய'மும் இருக்கிறது; 'தொடை நிரம்பிய' காப்பியம் தொடுத்தல் ஆகிய தொடர்புச்செறிவார்ந்த காப்பியம் உருவாகிறது' ஆம் உருவாக்கப் படவில்லை, உருவாகிறது.

முதலும் நடுவும் ஈறும் இறுகுறச் செறிந்த காவியமாக திறைவெய்துகிறது, இராமாவதாரம்

தொடை நிரம்பிய இந்தப் பாங்கினை மனத்திலே நிறுத்தித்தான் தோய்ந்தே போக பௌவத்தைக் கடந்த தந்தை நிலையினையும் கரை தெரிவிலாத போகத்தில் நின்ற மகன் நிலையினையும் கணித்தல் வேண்டும்.

* 20 - கம்ப 2,

இருவருமே போகிகள்தாமா? அவ்வாறாயின், மண்ணைக் காவல் தொழிலிருந்து வழுவி[21] விசயை தரும் காமமே[22] பெரிதெனக் கருதிய சச்சந்தனுக்கும் இவர்களுக்கும் என்ன வேற்றுமை? சச்சந்தன் விசயையிடத்து மயங்கிய நிலையினைக்

குங்குமத் தோளினானும்
கொழுங்கயற் கண்ணினாளும்
தங்கிய காதல் வெள்ளம்
தணப்பறப் பருகும்நாள்[23]

என்று திருத்தக்கதேவர் விளக்குகிறார். சச்சந்த போகத்தின் விளைவினை விளக்குமிடத்து, "விசயமாதேவியைப் பிரிந்திருக்க என்னால் முடியாது. தேவ அமுதொத்த அவளைப் பிரிதல் ஆற்றேன்" என்று குறிக்கிறார், திருத்தக்கதேவர். போகக் களியாட்டிலே - தங்கிய காதல் வெள்ளத்தில் நீக்கமறப் பருகிய களியாட்டிலே கட்டியங்காரனிடம் அரசை ஒப்படைத்து விடுகிறான் சச்சந்தன்.

அசைவிலாப் புரவி வெள்ளத்து
அரிஞ்சயன் குலத்துள் தோன்றி
வசையிலாள் வரத்தின் வந்தாள்
வான்சுவை அமிர்தம் அன்னாள்
விசையையைப் பிரிதல் ஆற்றேன்
வேந்தன்நீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டும்
இலங்குபூண் மார்ப என்றான்[24]

இன்பத் துறையில் எளியனாகிப் போக வெள்ளத்தில் நிலை பெற்ற சச்சந்தனின் மகன் சீவகனும் போக வாழ்வில் திளைத்தவ

21 - சீவக சிந்தாமணி 198, 22 - சீவக சிந்தாமணி 201,
23 - சீவக சிந்தாமணி 199, 24 - சீவக சிந்தாமணி 201

னாகவே ஓவியப்படுத்தப்பட்டுள்ளான். பெண்டிர் எண்மரை மணத்தொடர்பால் துய்த்ததோடன்றி மாதர் பிறரோடும் அவன் போகியாய் இருந்திருக்கிறான்.

விமலையார் இலம்பகத்துள் ஓர் இடத்தினை இங்கே எடுத்துக்காட்டலாம்.

தாய் விசயமாதேவியைக் கண்டு அளவளாவியபின் ஏமாங்கத நாடு செல்கிறான் சீவகன்; அந்நாட்டின் இராசமாபுரத் தருகே இரவில் ஒரு சோலையில் தங்கி உண்டு உறங்குகிறான். அங்கே அவன் இரவு நேரத்தை எவ்வாறு கழித்தான் என்பதைத் திருத்தக்க தேவர் வாக்கால் காணலாம் :

தெளித்தஇன் முறுவல்அம் பவளம் செற்றவாய்க்
களிக்கயல் மழைக்கணார் காமம் காழ்கொளீ
விளித்தல்இல் அமிழ்துஉறழ் கீதம் வேள்வான்
அளித்தபின் அமளியஞ் சேக்கை எய்தினான்[25]
தீங்கரும்பு அணுக்கிய திருந்து தோள்களும்
வீங்கெழில் தோள்களும் மிடைந்து வெம்முலை
பூங்குளிர் தாரொடு பொருது பொன்உக
ஈங்கனம் கனைஇருள் எல்லை நீந்தினான்[26]

முழுமையான தெளிவு தரவல்ல வகையில் இச் செய்யுள்களுக்கு விளக்கம் தர விரும்பவில்லை. நச்சினார்க்கினியர் மிகச் சுருக்கமாகத் தந்துள்ள பொழிப்புரையினைமட்டும் இங்கே காண்க: "மகளிர் பாடிய கீதத்தைச் சீவகன் கொண்டாடிய பின்பு காமத்தே வயிரங்கொண்டு படுக்கையாகிய தங்குமிடத்தை எய்தினான் என்க. கரும்பைக் கெடுத்த தோள்களும் எழில் தோள்களும் மிடைதலாலே முலை அவன் தாரோடே பொருது பூண்கள் சிந்தும்படி இரவெல்லையை இங்ஙனம் நீந்தினான் என்க"

* 25 - சீவக சிந்தாமணி 1941, 26 - சீவக சிந்தாமணி 1942.

இங்குக் காட்டியவற்றுள் முதற்பாடலில் சீவகனை மன்மதன் (வேனலான்) என்றே பரியாயப் பெயரால் குறித்திருப்பதும் நோக்கத் தக்கது.

இதற்கு முன் சீவகன் மணந்த மகளிர் எவரும் உடன் வந்ததற் கான ஆதாரச் செய்தி ஏதும் இல்லை. இங்குக் காட்டில் இரண்டாம் பாடல் உரை விளக்கத்தில் "இவன் நுகர்தற்கு உரிய மகளிர் பலரும் வந்தார் என்க" மனைவியரை நுகர்தற்குரிய மகளிர் என நச்சினார்க் கினியர் கருதியிருக்கலாமோ என்று ஐயுறுதற்கும் இடம் இல்லை.

விமலையார் இலம்பகத் தொடக்கத்தில் வரும் ஒரு நிகழ்ச்சி நினைவுகூரத் தக்கது. சீவக நம்பியை அவன் நண்பர்கள் பேணிக் காத்தற்கு மேற்கொள்ள வேண்டிய எச்சரிக்கைகளை நந்தட்டன் கூறுகிறான் அச்செய்தி சொல்லும் செய்யுள்களில் ஒன்றில்,

தோய்தகை மகளிர்த் தோயின்
மெய்யணி நீக்கித் தூய்நீர்
ஆய்முது மகளிர் தம்மால்
அரில்தவத் திமிரி யாட்டி
வேய்நிறத் தோளி னார்க்கு
வெண்துகில் மாலை சாந்தம்
தான்நல கலங்கள் சேர்த்தித்
தடமுலை தோய்க என்றான்[27]

சீவகன் மகளிர்பால் சேரவேண்டிய நிலை நேர்ந்தால் அந்த மகளிர்பற்றி மேற்கொள்ளவேண்டிய எச்சரிக்கைச் செயல்களை நந்தட்டன் இங்கே கூறுகிறான். அம்மகளிர் அணிந்துள்ளவற்றை நீக்கி, நம்பிக்கைக்கு உரிய முதுமகளிரைக் கொண்டு தூய நீரால் நீராட்டி, வேறு வெள்ளையாடையும் சந்தனமும் அழகிய நகைகளும் அணிவித்துச் சீவகனிடம் அனுப்பவேண்டுமாம்.

* 27 - **சீவக சிந்தாமணி** 1892

இந்த எச்சரிக்கைகள் வாழக்கைத் துணைவியராகிய இல்லத்தரசியர்க்கும் பொருந்தும் என எவரும் சொல்வர்.

எனவே, மணத்தொடர்புடைய மனைவியர் மட்டுமன்றி பிற மகளிரிடத்தும் போகம் கொண்டான் எனக் கணிக்கவேண்டியுள்ளது. இது சீவக போகம்.

வேனலான் (மன்மதன்) என்ற சிறப்புமட்டுமன்றிக் 'காமதிலகன்' என்ற சிறப்புக்கும் சீவகன் உரியன் என்கிறார், திருத்தக்கத்தேவர்.

தந்தை சச்சந்தன் காமக் களிமயக்கால் ஆட்சிக் கடமையினை அமைச்சனிடம் ஒப்படைத்துவிட்டவன். அவன் ஒரு தாரம் கொண்டவன். மகன் சீவகன் ஆட்சியுரிமையைப் போராடி வென்ற கொற்றத்தான். ஆனால், மகளிர் பலர்பால் தோய்ந்த வேனலான், காமதிலகன்.

இராமாவதாரத்துள் தந்தை தயரதன் போகக் கடலைத் தோய்ந்தே கடந்தவன்; மகன் இராமன் கரை தெரிவிலாத போகக் களிப்பினுள் நாளும் நிலைத்தவன்.

ஆக, சிந்தாமணி நாயகர்க்கும் இராமாவதார நாயகர்க்கும் பெரிதும் வேறுபாடு இல்லையோ என்பதைக் கருதிப்பார்த்துக் கணிக்க வேண்டியுள்ளது.

சிந்தாமணிக் காப்பியத்தின் தலைவனாகிய சீவகன் காமதிலகனே. ஆயின், வேட்கைத் தன்மை என்னும் நாவாலே காமமாகிய கள்ளை நிறைய உண்டு வீட்டினைத் தரும் நற்செய்கை சிறிதுமின்றிப் போகத்தே மயங்கிய நிலைக்கு வருந்தி[29] துறவிலே நாட்டம் உறுகிறான். சோலையில் கண்ட கடுவன்-மந்தி காட்சியால் நிலையாமை உணர்ந்து ஞானநாட்டம் உற்றுத் தக்க வகையில் துறவு பூண்டு 'சீவகசாமி' ஆகி உயர்கிறான்.

* 29 - சீவக சிந்தாமணி 2729

இவ்வாறு சீவக போகம் சீவக போதமாக மாறி வளர்வதையும் திருத்தக்கதேவர் புலப்படுத்துகிறார். ஒருவகையில் சீவகனைக் காப்பிய 'அருணகிரிநாதர்' எனவும் கணிக்கலாம்போலும்.

சீவக நம்பியின் துறவுப் பாங்கினை அவன் துணைவியர் பலவாறு சுட்டி வருந்துகின்றனர்; அவர் வருத்தம் புலப்படுத்தும் ஒரு பாடல் :

கண்ணோ கயலோ கழுநீரோ காவியோ
பெண்ணோ அமுதோ பிணையோ எனப்பிதற்றித்
துண்ணெனன் சிலைத்தொழிலும் காட்டிமுன் இன்புற்றீர்
புண்மேற் கிழிபோல் துறத்தல் பொருளாமோ[30]

புண்மீது மருத்திட்டுக் கட்டிய துணியைத் துச்சமெனத் தூக்கி எறிவதுபோலப் போக வாழ்வு நல்கிய மகளிரைப் புறக்கணித்துவிடு கிறான், சீவகன். உவமையின் நுட்பம் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.

சச்சந்தன், சீவகன் ஆகியோரின் போக வாழ்வு கவிச்சக்கரவர்த் தியின் சிந்தனையிலே பதிந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. திருத்தக்கதேவர் படைத்த தந்தை, தனயன் ஆகியோரின் போக சிற்பங்கள் கம்பரின் கலையுலைக்கூடத்திலே மாற்றுருவம் கொண்டிருக்க இடனுண்டு என்பது என் கருத்து.

இரண்டு காப்பியங்களும் தீட்டியுள்ள போக ஓவியங்கள் மேலும் ஆழ்ந்த ஆய்வுக்கு உரியன என்ற அளவில் இதனை நிறுத்தி, இராமாவதாரத்துத் தந்தை-தனயன் போக ஓவியங்கள்பற்றிச் சிந்தனையைத் தொடர்வோம்.

கம்பர் தீட்டிய போக ஓவியங்கள் தயரதனும் இராமனும் போகியரே என்று நிலைநாட்டுவதற்காக என்று என்பது திண்ணம். அவர்கள் வெறும் போகியரே என்றாகிவிடின் இராமகாதையின் எதிர்நிலைப் பாத்திரங்களுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு இல்லையென்று ஆகிவிடும்.

---

* 30 - *சீவக சிந்தாமணி 2960*

தயரதன் சச்சந்தன் அல்லன்; இராமன் சீவகன் அல்லன்.

காப்பிய ஆசிரியர்கள் இருவர் சிந்தனையிலே தந்தை-தனயர்களின் போக நிலை படிந்தது என்ற அளவிலே கொள்ளுதல் சாலும். திருத்தக்கதேவரின் ஓவியங்கள் கம்பரின் சிந்தனையையும் கற்பனையையும் தூண்டியிருக்கக் கூடும் என்ற அளவிலேயே என் எண்ணம் அமைகிறது. நம் ஆய்வுக்கும் கணிப்புக்கும் இனிமேல் முன் நிற்பது தயரதன்-இராமன் போகநிலை வேற்றுமையே.

தயரதன் போகத்திற்கும் இராமபிரான் போகத்திற்கும் இடையேயுள்ள வேற்றுமையை ஆராயப்புகுமுன்னர், இராமகாதையின் வேறுசில பாத்திரங்களின் போக நிலையினைக் கணித்தறிவது உதவியாக இருக்கும்.

கோசிகன் > விசுவாமித்திரன்

இராம காதையின் தொடக்கமாகிய பால காண்டத்தில் வருகிறார் விசுவாமித்திரர். பாட எடுத்தது இராமன் கதையே; ஆயினும், வான்மீகத்திலும் கம்பராமாயணத்திலும் விசுவாமித்தரரின் வரலாறு விரிவாகவே பேசப்படுகின்றது. இராம காவியத்தின் வடிவமைப்புக்குத் தொய்வூட்டுகிறதோ என்று ஐயுறுமளவுக்கு அம் மாமுனிவரின் கதை இடம் பெற்றுள்ளது.

வான்மீகியின் இராமாணத்தில் பாலகாண்டம் எழுபத்தேழு சருக்கங்கள் கொண்டது. இதில் பதினாறு சருக்கங்கள் விசுவாமித்திரன் கதை கூறுவன.

கம்ப ராமாயணத்தில் மிதிலைக் காட்சிப் படலத்தில்தான் விசுவாமித்திரன் வரலாறு சதானந்தரால் எடுத்துரைக்கப்படுகின்றது. அப்படலத்தின் 157 பாடல்களில் விசுவாமித்திரன் வரலாறு பற்றியவை 45 பாடல்கள்.

வான்மீகரும் கம்பரும் விசுவாமித்திரர்பற்றித்தரும் செய்திகளில் குறிக்கத்தக்க பெரும் வேறுபாடோ முரண்பாடோ இல்லை.

கோசிகன் ஒரு மன்னன். கானகத்தில் படை பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்கிறான். காட்டிலே வசிட்ட முனிவரைக் கோசிக மன்னன் சந்திக்கிறான். விருந்தோம்பும் வகையில் மன்னனுக்கும் பெரும் பரிவாரத்துக்கும் வசிட்டர் பெருவளங்கொண்ட விருந்து படைக்கிறார். கானக வாழக்கையில் உள்ள வசிட்ட முனிவரால் ஓர் அரசனுக்கும் பெரும் பரிவாரத்துக்கும் வள விருந்து படைக்க முடிந்தது எப்படி? சுரபி என்னும் தெய்வப் பசுவின் திறம் இது என உணர்ந்த கோசின், 'கானகத் துறவிக்கு இச் சுரபி பொருத்தமிலா உடைமை; எவரிடம் உள்ள பொருளும் ஆளும் தலைவனுக்கே உரியது. ஆதலின் சுரபியை எனக்குத் தருக என்று கேட்கிறான். 'அதனை வழங்கிட யான் இசையேன். அதுவே உன்னோடு வருமாயின் கொண்டு செல்க' என்று விடையிறுக்கிறார் வசிட்டர். கோசிகன் முயற்சி தோல்வியில் முடிகிறது. விருந்து படைத்த சுரபியின் மேனியிலிருந்து வெளிவந்த வீரர் கணங்களால் கோசிகன் படைகள் சிதைவுறுகின்றன. சுரபியின் ஆற்றலன்று எனவும் வசிட்டமுனிவரின் தவப்பெருமை கொண்டு அவர் செய்த வஞ்சனை எனவும் நினைந்து எதிர்த்தனன் கோசிகன். வசிட்டரின் எரிவிழிக்கு இரையாயினர் கோசிகன் குமரர். வசிட்டரையே எதிர்த்துப் போரிட முனைகிறான், அரசன். வசிட்டரின் யோக தண்டம் கோசிகனின் படைக்கலங்களை விழுங்கிவிடுகிறது. தேவர் தந்த படைக்கலங்க ளெல்லாம் கூட வசிட்டரின் யோக தண்டத்தால் விழுங்கப்படுகின்றன. அந்த நெருக்கடியிலும் சிவபிரானை வணங்கி ஓர் அற்புதப் படைக்கலம் பெற்றுக் கோசிக மன்னன் வசிட்டருக்கு எதிராக ஏவினான். அதுவும் சிந்திச் சிதறியது; மன்னனின் ஆணவ முரணும் சிந்திச் சிதறியது.

'மறை முனிவர்க்கே வலிமை மிகுதி' அரச வலிமை சீரியதன்று; என உணர்ந்த அரசன், 'மண்ணுலகம் முழுவதையும் ஆளும் வலிமை உண்மையில் வலிமையாகாது. ஆகவே, இனிமேல் தவம் செய்து உயர்வேன்' என முடிவு செய்கிறான். கிழக்குத் திசைக்குச் சென்று, வசிட்ட முனிவரின் தவ வலிமையையும் வெற்றியையுமே மனத்திலே

இருத்தி அருந்தவம் செய்தான். கோசிகனின் தவமுயற்சியில் பொலிகின்ற நிலையைக் கண்ட இந்திரன் துணுக்குற்றான்; தவத்தைக் கலைக்கத் திலோத்தமையைத் தூண்டிவிட்டான். திலோத்தமையின் உடல் அழகும் மன்மதன் மலர் அம்புகளும் கோசிகன் தவத்தைக் குலைத்தன. கோசிகன் காமக்களியிலே பல காலம் கழித்தான். கடைசியில் தெளிவு பெற்றான்; தன் தொய்வுபற்றி எண்ணித் தன்னையே நொந்துகொண்டான்; நொந்த மனத்தொடு வெகுளிச் சிரிப்புச் சிரித்தான். தன் தவத்தைக் கெடுத்த திலோத்தமையை மானிடப் பெண்ணாகச் சபித்தான். ஆக, காமமும், சினமும் கலந்து கவுசிகனின் தவம் குலைந்தது.

ஆயினும், தவநாட்டம் குறையாமல் வளர்ந்தது. தென்திசை நோக்கிச் சென்றான்; தவம் செய்தான். இப்போது வேறு வகையான சூழலால் தவப் பயன் குலைந்தது. வசிட்டரின் சீடனாகிய திரிசங்கு அம்முனிவரை நாடி, தனி மேனியோடு துறக்கம் செலுத்துமாறு உதவி நாடினான். வசிட்டர் மறுத்தார். பிறர் உதவி நாடித் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதாகச் சொல்லிச் சென்ற திரிசங்கு, வசிட்டர் சாபத்தால் நீசன் ஆனான். வசிட்டருக்குப் போட்டியாகிவிட்ட கோசிக 'முனிவன்' தன் தவப் பெருமையால் திரிசங்குவுக்குத் தம் உலகத்துள் ஏற்க மறுத்தனர். கோசிக முனிவனோ தேவர்கள் மீதே சினங்கொண் டான். தேவர் உலகுக்குப் போட்டியாகத் திரிசங்குவுக்கே தனியொரு சுவர்க்கம் படைத்தான்.

சினத்தோடும் தவத்தோடும் பிணைந்த நிலையினனாகிய கோசிகனை அமைதிப்படுத்தித் திரிசங்கு சுவர்க்கத்தைத் தேவர்கள் ஏற்றனர். 'அடைக்கலம்' புகுந்தவனுக்கு உதவிய நின் திறன் நன்று; திரிசங்கு சுவர்க்கம் நிலைப்பதாக. இனி, நீ அரச மாதவன் (ராஜரிஷி) ஆவாய் என்றனர், தேவர்கள்.

(தொடரும்)

உன்னத உடல் நலம் தரும் உயர்வான வாழ்வு தமே்

உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை - 625 107. போன் : 588741-56
Fax : 536535 E-mail:mmhrc@md2.vsnl.net.in

ஜோ ஆப்செட், மதுரை-1. ☎ **743063**